2016 ஆகஸ்ட் 12]

61—

துணை மின் நிலையம்

***812—திரு. ஆர். நடராஜ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாப்பூர் தொகுதி, மந்தைவெளியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மந்தைவெளிப் பகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைப்பதற்கு உண்டான ஏற்பாடுகளை செய்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.*

திரு. ஆர். நடராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் காவல் பணியில் இருந்த எனக்கு, மக்கள் சேவகனாகப் பணிபுரியும் வாய்ப்பினை அளித்த உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) காவலர்களின் நிரந்தர காவல் தெய்வம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது இதயமார்ந்த கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'நன்றி' என்ற ஒரு சொல்லால் நன்றிக் கடனைத் தீர்க்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் அர்ப்பணிப்போடு, நேர்மையாக, மக்கள் பணியில் ஈடுபடுவதே நான் அளிக்கக்கூடிய நன்றிக் கடன். உத்தரவின்றி வர முடியாது என்று வெளியில் காவல் பணியில் இருந்த எனக்கு, உத்தரவு*

அளித்து வெற்றி பெறச் செய்த மயிலாப்பூர் தொகுதி மக்களுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* கழகப் பொறுப்பாளர்கள், கழக கட்சித் தொண்டர்கள், தோழமைக் கட்சித் தொண்டர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்த 'பொறுமையின் சிகரம்' மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10—25

மயிலாப்பூர் தொகுதி மக்களுக்கு லஸ், விசாலாட்சித் தோட்டம், பட்டினப்பாக்கம் மற்றும் மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள 4 துணை மின் நிலையங்கள்மூலம் மின் வசதி செய்து தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு துணை மின் நிலையமும் 33/11 கே.வி.ஏ. மின் திறன் கொண்டதாக அமைந்துள்ளன. மந்தைவெளியில் மட்டும் 5,924 மின் இணைப்புகள் உள்ளன. பயனீட்டாளர்களின் மின் பயன்பாடு அதிகரித்துள்ளதால், கூடுதலான மின்சாரம் உபயோகப்படுத்தப்படுகிறது. பல நேர்வுகளில் மின்னழுத்தமும் குறைகிறது. மேலும், பட்டினப்பாக்கம் மின் நிலையம் கடற்கரையையொட்டி இருப்பதால், உப்புக் காற்றால் மின் நிலையத்தில் பழுது ஏற்பட்டு, மின் தடை பல மணிநேரம் தொடர்கிறது. மின் பொறியாளர்கள் மயிலையின் மத்திய பகுதியான மந்தைவெளியில் ஒரு துணை மின் நிலையம் அமைத்தால், தடையின்றி மின்சாரம் வழங்க இயலும் என்று தெரிவித்துள்ளார்கள். மந்தைவெளியில் வசிக்கும் மக்களுக்கு சீரான மின் விநியோகம் செய்ய, மின் சாதனப் பொருட்களை சேதமில்லாமல் இயக்குவதில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க ஒரு திட்டம் இருப்பதாக தெரிவித்துள்ள மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலையின் பல பகுதிகளில் மின் பெட்டிகள் பழுதடைந்துள்ளன. சென்னையில் 38,844 மின் தூண் பெட்டிகள் ரூ.270 கோடி செலவில் உயர் சிதைவுத் திறன் எரியிழை கட்டுப்பாட்டுடன்கூடிய லேசான எஃகு உலோக உறை கொண்ட 6 வழி மின் தூண் பெட்டிகளாக மாற்றப்படுமென்று, கேட்பதற்கு முன்பே மக்கள் நலன் கருதி அறிவிப்புகளை வெளியிட்ட *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு

என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள பழுதடைந்த மின் தூண் பெட்டிகளையும் மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மந்தைவெளிப் பகுதியில் துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். சென்னையைப் பொறுத்தவரை, இடம் கிடைப்பது என்பது மிக அரிதாக இருக்கிறது. எனவே, PRO Quarters–ல் இடம் கேட்டிருக்கிறோம். அதற்குண்டான ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இடம் கிடைத்தவுடன், உடனடியாக அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மின்மாற்றிகளைப் பொறுத்தவரை, இரண்டு நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவிப்பு செய்திருக்கின்றார்கள். சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் மின்மாற்றிகளை மாற்றி அமைக்க வேண்டும்; உயரழுத்தம் காரணமாக மின் பளு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் 14,535 மின்மாற்றிகள் அமைப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.